பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை- 4

24 07 2024 **WEDNESDAY** 7 15 **PM**

தலைப்புச் செய்திகள்

1. தமிழகத்தில் ரயில்வே திட்டங்களுக்கு 6 ஆயிரத்து 362 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக ரயில்வே அமைச்சர் திரு. அஸ்வினி வைஷ்ணவ் கூறியுள்ளார்.

2. சென்னை – பெங்களூரு விரைவுச்சாலை பணிகள் நடப்பு நிதியாண்டு இறுதிக்குள் நிறைவடையும் என்று மத்திய அமைச்சர் திரு. நிதின் கட்கரி தெரிவித்துள்ளார்.

3. புதிய குற்றவியல் சட்டங்கள் தொடர்பாக பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருவதாக உள்துறை இணையமைச்சர் திரு. **Bandi Sanjaykumar** கூறியுள்ளார்.

4. நேபாளத்தில் நேரிட்ட விமான விபத்தில் 18 பேர் உயிரிழந்தனர்.

5. **Crunchlabs Masters Chess** போட்டியில் இந்தியாவின் **Arjun Erigaisi** பட்டம் வென்றார்.

**>>>><<<<**

நாடுமுழுவதும் கடந்த பத்தாண்டுகளில் 31 ஆயிரம் கிலோமீட்டர் தொலைவுக்கான புதிய ரயில் தடங்கள் அமைக்கப்பட்டுள்ளதாக ரயில்வே அமைச்சர் திரு. அஸ்வினி வைஷ்ணவ் கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், 40 ஆயிரம் கிலோமீட்டர் தொலைவுக்கான ரயில் பாதை மின்மயமாக்கப்பட்டிருப்பதாக தெரிவித்தார்.

மத்திய பட்ஜெட்டில் தமிழகத்தின் ரயில்வே திட்டங்களுக்காக 6 ஆயிரத்து 362 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பதாகவும் அவர் கூறினார்.

மாநிலத்தில் 22 புதிய திட்டங்கள், 33 ஆயிரத்து 467 கோடி ரூபாய் செலவில் செயல்படுத்தப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

தமிழகத்தில் உள்ள 77 ரயில் நிலையங்கள் மேம்படுத்தப்பட்டு வருவதாகவும் அவர் கூறினார்.

பஞ்சாப் மாநிலத்தில் ரயில் திட்டங்களை செயல்படுத்துவதற்காக 5 ஆயிரத்து 147 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பதாகவும் அவர் கூறினார்.

இது, ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசு ஒதுக்கிய நிதியைவிட 23 மடங்கு அதிகம் என்றும் அவர் தெரிவித்தார்.

இதேபோல், ராஜஸ்தான் மாநிலத்தில் ரயில் திட்டங்களை செயல்படுத்துவதற்காக 9 ஆயிரத்து 950 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பதாகவும் திரு. அஸ்வினி வைஷ்ணவ் கூறினார்.

>>>><<<<

புதிய குற்றவியல் சட்டங்கள் தொடர்பாக பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருவதாக உள்துறை இணையமைச்சர் திரு. **Bandi Sanjaykumar** தெரிவித்துள்ளார்.

மாநிலங்களவையில் கேள்வி நேரத்தின்போது இதனை தெரிவித்த அவர், அகில இந்திய வானொலி மற்றும் தூர்தர்ஷன் செய்தி அறிக்கைகள் மற்றும் சிறப்பு விவாதங்கள் வாயிலாக விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருவதாக தெரிவித்தார்.

சமூகவலைதளங்கள் மூலமாகவும் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருவதாக அவர் கூறினார்.

இதுதொடர்பாக பயிலரங்குகளும், 27 மாநிலங்களின் தலைநகரங்களில் நடத்தப்பட்டதாக அமைச்சர் தெரிவித்தார்.

>>>><<<<

மத்திய பட்ஜெட்டில் புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்குவதற்கு இதுவரை இல்லாத அளவிற்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளதாக அஸ்ஸாம் முதலமைச்சர் திரு. ஹிமந்த பிஸ்வா சர்மா கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமனை சந்தித்த பின், சமூகவலைதளத்தில் அவர் இக்கருத்தை பதிவு செய்துள்ளார்.

மகளிர், இளையோர், சிறு குறு தொழில்துறையினரின் வளர்ச்சிக்கான திட்டங்கள் இதில் இடம்பெற்றிருப்பதாக அவர் தெரிவித்தார்.

அஸ்ஸாமில் வளர்ச்சிக்கு தேவையான அனைத்து உதவிகளும் வழங்கப்படும் என்று நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் உறுதியளித்ததாகவும் திரு. ஹிமந்த பிஸ்வா சர்மா அதில் குறிப்பிட்டுள்ளார்.

>>>><<<<

சென்னை – பெங்களூரு விரைவுச்சாலை பணிகள் அடுத்த ஆண்டு மார்ச் மாதத்திற்குள் நிறைவடையும் என்று மத்திய சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் திரு. நிதின் கட்கரி கூறியுள்ளார்.

இன்று மாநிலங்களவையில் இதனை தெரிவித்த அவர், 7 ஆயிரத்து 525 கோடி ரூபாய் செலவில் இதற்கான பணிகள் நடைபெற்று வருவதாக தெரிவித்தார்.

இந்த சாலை பயன்பாட்டிற்கு வரும்போது, சென்னை – பெங்களூரு இடையேயான பயண நேரம் வெகுவாக குறையும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

தமிழகத்தில் இதர பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் சாலை மற்றும் சாலை விரிவாக்கப் பணிகள் அடுத்த ஆண்டிற்குள் நிறைவடையும் என்றும் திரு. நிதின் கட்கரி கூறினார்.

>>>><<<<

ஜனநாயக நெறிமுறைகளுக்கு எதிராக எதிர்க்கட்சிகளின் ஒருங்கிணைந்த கூட்டணி செயல்படுவதாக மத்திய அமைச்சர் திரு. பியூஷ் கோயல் குற்றம் சாட்டியுள்ளார்.

இன்று புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், ஜனநாயகத்தின் மீது நம்பிக்கை உள்ளதாக கூறிக் கொண்டு, அதற்கு மாறாக எதிர்க்கட்சிகளின் செயல்பாடு உள்ளது என்றும் குறிப்பிட்டார்.

கடந்த ஆண்டு நடைபெற்ற நித்தி ஆயோக் கூட்டத்தை தமிழகம், தெலங்கானா உள்ளிட்ட எட்டு மாநிலங்களின் முதலமைச்சர்கள் புறக்கணித்ததை அவர் சுட்டிக்காட்டினார்.

காங்கிரஸ் கட்சியின் வழிகாட்டுதலின் பேரில் இதுபோன்ற தவறான நடவடிக்கைகளில், எதிர்க்கட்சிகள் ஈடுபடுவதாகவும் திரு. பியூஷ் கோயல் கூறினார்.

>>>><<<<

நிலக்கரி உற்பத்தி தொடர்ந்து அதிகரித்து வருவதாக மத்திய அரசு கூறியுள்ளது.

நடப்பு நிதியாண்டில் இதுவரை 11 சதவீதம் அளவிற்கு நிலக்கரி உற்பத்தி அதிகரித்துள்ளதாக மத்திய அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

நிலக்கரியை சீராக விநியோகம் செய்வது உறுதி செய்யப்பட்டுள்ளதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

>>>><<<<

உச்சநீதிமன்றத்தின் 75வது ஆண்டு கொண்டாட்டங்களை ஒட்டி, வரும் 29ஆம் தேதி தொடங்கி அடுத்த மாதம் 3ஆம் தேதிவரை மக்கள் நீதிமன்றங்கள் நடைபெறும் என்று தலைமை நீதிபதி திரு. சந்திரசூட் அறிவித்துள்ளார்.

நிலுவையில் உள்ள வழக்குகளுக்கு சமரச வகையில் தீர்வு காணும் நோக்கில் நடத்தப்படும் இந்த மக்கள் நீதிமன்றங்களை, சம்பந்தப்பட்டவர்கள் முழுமையாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

>>>><<<<

நேபாளத்தில் நேரிட்ட விமான விபத்தில் 18 பேர் உயிரிழந்தனர்.

காத்மண்டு சர்வதேச விமான நிலையத்திலிருந்து 19 பயணிகளுடன் புறப்பட்ட விமானம், சில நொடிகளிலேயே விபத்துக்குள்ளானதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

இந்த விமானத்தில் பயணம் செய்த ஒருவர் மட்டும் காயங்களுடன் சிகிச்சைக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருப்பதாக அவர் மேலும் கூறுகிறார்.

விபத்து நடந்த இடத்தை அந்நாட்டு உள்துறை அமைச்சர் திரு. **Ramesh Lekhak** ஆய்வு செய்தார்.

>>>><<<<

ஆந்திராவில் நடப்பு நிதியாண்டிற்கான பட்ஜெட், 2 மாதங்களுக்குப் பிறகு தாக்கல் செய்யப்படும் என்று அம்மாநில முதலமைச்சர் திரு. சந்திரபாபு நாயுடு கூறியுள்ளார்.

சட்டப்பேரவையில், ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதத்திற்கு இன்று பதிலளித்து அவர் பேசினார்.

நிதி சிக்கலை கருத்தில் கொண்டு, இந்த முடிவு மேற்கொள்ளப்பட்டிருப்பதாக அவர் தெரிவித்தார்.

முந்தைய அரசின் தவறான நிர்வாகம் காரணமாக, அனைத்து துறைகளிலும் சீர்திருத்தங்களை மேற்கொள்ள வேண்டியது அவசியமாகிறது என்றும் அவர் கூறினார்.

நிதி, சட்டம் ஒழுங்கு மற்றும் மதுவிலக்கு துறை தொடர்பான வெள்ளை அறிக்கைகள் வெளியிடப்படும் என்றும் திரு. சந்திரபாபு நாயுடு தெரிவித்தார்.

>>>><<<<

பீகார் சட்டப்பேரவையில் தேர்வு முறைகேடுகளை தடுப்பதற்கு வகைசெய்யும் சட்ட மசோதா இன்று நிறைவேறியது. இதன்படி தேர்வு முறைகேடுகளில் ஈடுபடுவோருக்கு 3 முதல் 10 ஆண்டுகள் சிறை தண்டனையும், ஒரு கோடி ரூபாய் அபராதமும் விதிக்க வகை செய்யப்பட்டுள்ளது.

>>>><<<<

இந்தியா – ரஷ்யா இடையே ராணுவ ஒத்துழைப்புக்கான துணைக் குழுவின் கூட்டம் புதுதில்லியில் நடைபெற்றது. இருநாடுகளுக்கும் இடையேயான பாதுகாப்பு ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்துவதற்கான அம்சங்கள் குறித்து இதில் விரிவாக விவாதிக்கப்பட்டது.

>>>><<<<

முன்னாள் அக்னி வீரர்களுக்கு எல்லை பாதுகாப்புப் படையில் 10 சதவீத இடஒதுக்கீடு வழங்கப்படும் என்று அதன் தலைமை இயக்குநர் திரு. **Nina Singh** கூறியுள்ளார்.

எமது செய்தியாளரிடம் இதனை தெரிவித்த அவர், இதற்கான முகாம் விரைவில் நடைபெறும் என்றார்.

இதேபோல், ரயில்வே பாதுகாப்புப் படையிலும் முன்னாள் அக்னிவீரர்களை சேர்ப்பதற்கான நடவடிக்கை விரைவில் தொடங்கும் என்றும் அதன் தலைமை இயக்குநர் திரு. மனோஜ் யாதவ் தெரிவித்தார்.

**>>>><<<<**

வருமான வரி தினம் இன்று கடைபிடிக்கப்பட்டது.

1860ஆம் ஆண்டு இதேநாளில் நாட்டில் முதல்முறையாக வருமான வரி விதிக்கப்பட்டதை நினைவுகூரும் வகையில் இது கடைபிடிக்கப்படுகிறது.

இதனையொட்டி, நாடுமுழுவதும் பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

சென்னையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் தமிழக ஆளுநர் திரு. ஆர்.என். ரவி பங்கேற்று, வருமான வரித்துறையில் சிறப்பாக பணியாற்றியவர்களுக்கான விருதுகளை வழங்கினார்.

**>>>><<<<**

ரிசர்வ் வங்கியிடம் அனுமதி பெறாமல், வெளிநாட்டு பங்குகளை வாங்கியது தொடர்பாக திமுக நாடாளுமன்ற உறுப்பினர் திரு. ஜெகத்ரட்சகனுக்கு அமலாக்கத்துறை அனுப்பிய நோட்டீஸை ரத்து செய்ய சென்னை உயர்நீதிமன்றம் மறுத்துள்ளது.

இதுதொடர்பாக தனி நீதிபதி பிறப்பித்த உத்தரவுக்கு எதிராக திரு. ஜெகத்ரட்சகன் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மேல்முறையீட்டு மனுக்களை விசாரணை செய்த நீதிபதிகள் திரு. எஸ்.எம். சுப்பிரமணியன், நீதிபதி திரு. சி. குமரப்பன் அமர்வு இன்று இதற்கான உத்தரவை பிறப்பித்தது.

**>>>><<<<**

நாட்டின் பல்வேறு பகுதிகளில் கனமழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

கோவா, மகாராஷ்ட்ரா, குஜராத் மாநிலங்களுக்கு உட்பட்ட ஒரு சில பகுதிகளில் அடுத்த இரு தினங்களுக்கு அதி கனமழைக்கு வாய்ப்புள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

**>>>><<<<**

**Crunchlabs Masters Chess** போட்டியில் இந்தியாவின் **Arjun Erigaisi** பட்டம் வென்றார்.

ஆன்லைன் மூலம் நடைபெற்ற இப்போட்டியின் இறுதிச் சுற்றில் அவர், ரஷ்யாவின் **Evgeny Alekseeve-**யை வென்றார்.

**>>>><<<<**

20 வயதுக்குட்பட்டோருக்கான ஆசிய மல்யுத்த சாம்பியன் போட்டியில் இந்தியா மகளிர் பிரிவில் 5 தங்கம், 3 வெள்ளி, ஒரு வெண்கலப்பதக்கம் வென்றது.

தாய்லாந்தில் நடைபெற்ற இப்போட்டியின் 55 கிலோ எடைப்பிரிவில் **Dhanshri Fand-**ம், 57 கிலோ எடைப்பிரிவில் **Tapsya-**வும், 62 கிலோ எடைப்பிரிவில் **Nitika-**வும், 68 கிலோ எடைப்பிரிவில் **Shiristi-**யும், 76 கிலோ எடைப்பிரிவில் **Jothi Berwal-**ம் தங்கப்பதக்கம் வென்றனர்.

50 கிலோ எடைப்பிரிவில் **Muskan-**ம், 53 கிலோ எடைப்பிரிவில் **Kriti-**ம், 65 கிலோ எடைப்பிரிவில் **Sarika-**வும் வெள்ளிப்பதக்கம் வென்றனர்.

72 கிலோ எடைப்பிரிவில் **Amruta Pujari** வெண்கலப்பதக்கம் வென்றார். இப்போட்டியில் ஒட்டுமொத்த சாம்பியன் பட்டத்தையும் இந்தியா வென்றது.

இந்தோனேஷியாவில் நடைபெற்றுவரும் 20 வயதுக்குட்பட்டோருக்கான ஆசிய வாலிபால் சாம்பியன் போட்டியில் இந்தியா நாக்அவுட் சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

**>>>>END<<<<**